**இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுடனான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நியம இலக்கம் 02 இன் பிரகாரம் பணமாக கிடைத்த ரூபா 3,490,300 தொகையான கட்டிட வாடகை வருமானம் மற்றும் ரூபா 41,542,500 வட்டி வருமானம் குறைவாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டிட வாடகை வருமானம் ரூபா 3,490,300 தொகை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் இனங்காணப்படாமல் 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>வட்டி வருமானம் முன்னைய ஆண்டிற்குரிய (2019) மீளாய்வாண்டின் போது கிடைத்த வட்டி மற்றும் மீளாய்வாண்டிற்குரியதாக கிடைத்த வட்டி ரூபா 41,373,394 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | நியம இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 09 ஹோட்டல் பாடசாலைகளின் பதிவுக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் மற்றும் பாடநெறிக் கட்டணம் என மொத்த வருமானம் ரூபா 22,176,300 ஆக இருக்க வேண்டிய போதிலும், அது ரூபா 15,539,450 ஆக காசு அடிப்படையில் இனங்காணப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 6,636,850 தொகை குறைவாக நிதிக் | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஹோட்டல் பாடசாலைகளின் வருமானம் சரியாக கணப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் மிகைகள் அந்த அளவினால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காணபிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சுற்றுலாத்துறை பொலிஸ் பிரிவில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,192,000 வாடகை வருமானம் 2014 ஆம் ஆண்டின் போது வருமானமாக இனங்காணப்பட்டு பெறவேண்டிய கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்ட போதும் இந்த பணத்தை அறவிடுதல் தொடர்பாக நிச்சியமற்ற நிலைமையொன்று காணப்பட்ட போதும், அதற்கான இழப்பீட்டு பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையிடம் கலந்துரையாடி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பௌதீக ரீதியாக கிடைக்கப் பெறாத வாடகை வருமானம் தொடர்பாக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | பெற வேண்டிய கணக்குகள் | | | | | |
| (i) | இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் | 3,198,800 | 52,675 | 3,146,125 | 2021 ஆம் ஆண்டின் போது உரிய நிறுவனங்களுடன் கலந்தரையாடி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 7,481,441 | 188,669 | 7,292,772 | 2021 ஆம் ஆண்டின் போது உரிய நிறுவனங்களுடன் கலந்தரையாடி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | | | | |
| - | இலங்கை சுற்றுலா | 0 | 8,971,304 | 8,971,304 | 2021 ஆம் ஆண்டின் போது உரிய நிறுவனங்களுடன் | சரிசெய்வதற்கு நடவடிக்கை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அபிவிருத்தி அதிகார சபை | | | | கலந்தரையாடி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இடர் கடன் | 1,260,594 | 0 | 1,260,594 | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வியாபார கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 25,517,565 ஆக இருந்ததுடன், 2021 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் எந்வொரு கடன்பட்டோர்களிடம் இருந்தும் மீதி உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த கடன்பட்டோர்களின் கூட்டுமொத்தமான ரூபா 15,987,312 தொகை 05 வருடங்களுக்கு மேல் நிலவையாக காணப்பட்டதுடன் அது மொத்த வியாபார கடன்பட்டோரில் 63 சதவீதமாக இருந்தது. அதனிடைய ஒரு கடன்பட்டோரிடம் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,068,000 தொகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மேலும் ரூபா 5,140,571 தொகை முன்னாள் காணப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் கடன்பட்டோரின் இழப்பீட்டு பெறுமதிக்காக ஒதுக்கீடு செய்வதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்துதவற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் போது கடன்பட்டோர் மற்றும் ஐயக் கடன் ஏற்பாடுகளுக்கான கொள்கையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோருக்காக ஐயக் கடன் ஏற்பாடு ஒதுக்கீடு செய்யும் கொள்கையொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் நிலுவை கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரியாக ரூபா 1,452,439 தொகை 2014 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நிதிக் கூற்றுக்களில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்ட போதும் அந்த வரித்தொகையை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வரி தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 39(1) ஆம் உப பிரிவு | அமைச்சரிடம் ஆலோசனை பெற்று கல்விசார் சபையொன்றை நியமிப்பதற்கு 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2005/38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்விசார் சபைக்காக பரிந்துரை செய்யப்பட்ட பெயர் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. | கல்விசார் சபையொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | 2017 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு 2021 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 மற்றும் 2016 ஆம் வருடங்களின் ஆண்டறிக்கைளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களின் | ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டறிக்கைளின் பிரதிகள் மிகுதி நடவடிக்கைகளுக்காக சுற்றுலா துறை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2019 இன் ஆண்டறிக்கை அச்சிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (இ) சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>-------------------<br>நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்ட பணிகள் முடிவடைந்தவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 22 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 5,000 முதல் ரூபா 250,000 வரையான வீச்சில் செலுத்தப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதியை தீர்ப்பதற்காக 20 நாட்கள் முதல் 236 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | முற்பணம் வழங்குதல் உள்ளக சுற்றறிக்கை மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | செயல்நிமித்த உப கட்டுநிதி அது வழங்கப்பட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 204,886,499 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 629,050 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 205,515,549 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் சுற்றுலா அபிவிருத்தி வரி மற்றும் புறப்படுகை வரி வருமானங்கள் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது தகவல் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 3,771,216 செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் தேவையுடன் இணங்காமையின் காரணமாக அந்த முறைமை கைவிடப்பட்டிருந்தது. | 2014 ஆம் ஆண்டின் போது தகவல் முறைமை அபிவிருத்தி செய்வற்காக செலவிடப்பட்ட ரூபா 2,262,730 தொகை பணிப்பாளர் சபையிடம் கலந்துரையாடி கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் தேவையுடன் ஈடுகொடுக்கின்ற பிரகாரம் தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2011 ஆம் ஆண்டின் போது பொருளாதார அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்ற மோட்டார் வாகனம் ஒன்று மீளாய்வாண்டு வரை நிறுவகம் பயன்படுத்தியிருந்த போதிலும், அந்த மோட்டார் வாகனத்தின் உரித்தை நிறுவகத்திற்கு கையேற்பதற்கோ அல்லது வாகனத்தை மதிப்பீடுசெய்து கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருளாதார அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைத்த வாகனத்தின் உரித்தை கையேற்பதற்காக தொடர்ந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | வாகனத்தின் உரித்தை கையேற்கும் நடவடிக்கைகளை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்காக மூலப்பொருள் வழங்குனர்களை பதிவுசெய்யாமல் 2019 ஆம் ஆண்டில் பதிவுசெய்த வழங்குனர்களிடம் இருந்து 2019 ஆம் ஆண்டில் இணங்கப்பட்ட | 2019 ஆம் ஆண்டிற்காக வழங்குனர்களை பதிவுசெய்யும்போது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பெறுகை நடைமுறைகளை பூர்த்தி செய்வதற்கு தாமதம் ஏற்பட்டமையினால் 2019 | வழங்குனர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் புறக்கணிப்புக்ளுக்கு உரிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை |

| | | |
|---|---|---|
| விலைகளுக்கு புறம்பான சந்தைப் பெறுமதியில் ரூபா 10,406,662 தொகையான மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த புறக்கணிப்புக்களுக்கு உரிய காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன், இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | ஏப்ரல் முதல் 2020 மே மாதம் வரையான காலப் பகுதிக்காக மூலப் பொருட்களை வழங்குவதற்காக கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் சில மாதங்களுக்காக மீண்டும் வழங்குனர்களை பதிவுசெய்வதற்காக பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல் பொருளாதார ரீதியில் நலன்வாய்ந்ததாக இல்லாதிருந்தமையினால் 2019 ஆம் ஆண்டிற்காக பதிவுசெய்த வழங்குனர்களின் பதிவு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டிருந்தது. | பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 217 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 191 ஆனமையால் அதில் 26 பதவிகளில் வெற்றிங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களுக்கு இடையே பிரதி பணிப்பாளர் நாயகம் (கல்விசாரா) பதவியொன்று, பணிப்பாளர் (வியாபார) பதவியொன்று, 08 சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள் மற்றும் ஒரு உதவி விரிவுரையாளர் பதவி என்பன உள்ளடங்கியிருந்தது. | உரிய பதவிகளுக்கான தேவையான பிரகாரம் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடமாக உள்ள பதவிகளை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 09 செயற்பாடுகளுக்காக ரூபா 17.1 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த செயற்பாடுகள் எதுவும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், அதில் களஞ்சிய முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபித்தல் மற்றும் நிலையான சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபித்தல் என்பவற்றிக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 7 மில்லியன் தொகையும் உள்ளடங்கியிருந்தது. மேலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 04 செயற்பாடுகளுக்காக ஆண்டின் போது 50 சதவீதத்தினை விட குறைவான பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | காணப்பட்ட Covid 19 தொற்றுநோயின் நிலைமையின் அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அநேக செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன், களஞ்சிய முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பதற்கான செயற்பாடுகளின் கேள்வி மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. | செயல்நடவடிக்கை திட்டத்தினை மிகவும் வெற்றிகரமான முகாமைத்துவ சாதனமாக ஈடுபடுத்துதல் வேண்டும். |